## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| OS.No. 53/2023 | Date : 03.04.2025 | PW 1 |
|---|---|---|
| Name: சீனிவாசன் | த/பெ.அய்யண்ணன் | |

**1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 1 ஆம் பிரதிவாதிக்கு தம்பி என்றால் சரிதான். எனது தோட்டமான தாவா சொத்து நங்கவள்ளி – மேச்சேரி சாலையில் பழக்காரனூர் என்ற இடத்தில் சாலைக்கு கிழக்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். அந்த சாலைக்கு ஒட்டினாற்போல் எனது தோட்டம் அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த தார் சாலையை ஒட்டிதான் வீடு மற்றும் எனது தகப்பனார் எனது முதல் மனைவி கனகவள்ளிக்கு கிரயம் செய்து வைத்த 50 செண்ட் நிலமும் மற்றும் 5 செண்ட் நிலமும் அமைந்துள்ளது என்றால் சரிதான். 1999 ம் ஆண்டில் மேற்படி கிரயம் செய்து வைக்கப்பட்டது என்றால் சரிதான். எனது தகப்பனார் 2004 ம் வருடத்திலும், 2010 ம் வருடத்திலும் இரு நிலங்களை எனக்கு தான செட்டில்மெண்ட் செய்து வைத்தார் என்றும் மேற்படி நிலங்கள் அனைத்தும் ஒன்றாக அமைந்துள்ளது என்றும் சொன்னால் சரிதான். அதில் 3 கிணறுகளும் 1 தார்சு வீடு அமைந்துள்ளது என்றால் சரிதான். எனது நிலத்திற்கு கிழக்கு பக்கமாக கெச்சம்பட்டி ஊருக்கு செல்லும் தார்சாலை உள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் எனது முதல் மனைவிக்கு எழுதி வைத்த சொத்து மற்றும் எனக்கு எழுதி வைத்த சொத்துகள் மொத்தம் 4 ஏக்கர் 6 செண்ட் சொத்து எனது சுவாதீனத்தில் உள்ளது என்றால் இருக்கலாம். எனது மனைவிக்கு கிரயம் எழுதி வைத்த 55 செண்ட் நிலம், எனக்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்த 1 ஏக்கர் 41 செண்ட் மற்றும் 2 ஏக்கர் 23 செண்ட் மற்றும் 2010 ம் ஆண்டில் எழுதி வைத்த 85 செண்ட் சொத்து ஆகிய அனைத்தும் எனது அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களின் மொத்த விஸ்தீரணம் 5 ஏக்கர் 4 செண்ட் என்றும் அது எனது அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறது என்றால் சரிதான். எனது தகப்பனார் அய்யண்ணன் 1962 ம் வருடத்தில் சுயமாக கிரயம் பெற்ற சொத்தான 12 ஏக்கர் நிலம் அந்த இடத்தில் இருந்தது என்றால் சரிதான். தாவா 1 ஆம் அயிட்ட சொத்தாக வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சொத்து எனது தகப்பனார் அய்யண்ணன் எனது சகோதரரான 1 ஆம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த சொத்து என்றால் சரிதான். தாவா 1 ஆம் அயிட்ட சொத்தானது 18.10.2010 ம் தேதியன்று எனது தகப்பனார் அய்யண்ணன் தானசெட்டில்மெண்ட் மூலம் சர்வே எண். 41/2F ல் 0.93 செண்ட் நிலமும், சர்வே எண். 40/1 ல் 0.97 செண்ட் நிலமும் சக்குபந்தி கண்டு எழுதிக்கொடுக்கப்பட்டு இதுநாள்வரை 1 ஆம் பிரதிவாதியின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் முதல் விசாரணை நிருபண வாக்குமூலத்திலும் முனியப்பன் கோவிலுக்கு

சென்றுவரக்கூடிய எனக்கும் எனது முதல் மனைவி கனகவள்ளிக்கும் தடவழி பாத்தியம் இருப்பதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சர்வே எண். 41/2F ல் 50 செண்ட் மற்றும் 5 செண்ட் நிலத்தை 08.02.1999 அன்று என் தகப்பனார் அய்யண்ணன் என் முதல் மனைவி கனவள்ளிக்கு குறைந்த விலையான ரூ. 25,000/- க்கு கிரயம் கொடுத்துவிட்டார் என்றால் அன்றை சந்தை விலைக்கு கிரயம் கொடுத்தார். வா.சா.ஆ.3 ஆவணத்தில் முனியப்பன் கோவிலுக்கு சென்று வரக்கூடிய தடவழிப்பாத்தியம் எனக்கும் எனது முதல் மனைவி கனகவள்ளிக்கும் இருப்பதாக எந்த விவரமும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணமான 20.08.2004 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் சர்வே எண். 41/2F ல் 1 ஏக்கர் 47 செண்ட், சர்வே எண். 39 யில் 2 ஏக்கர் 23 செண்ட் நிலமும் மற்றும் அதில் உள்ள 3 கிணறுகள் அதில் கட்டப்பட்டுள்ள தார்சு வீடு ஆகியவை குறிப்பிட்டு தானசெட்டில்மெண்ட் எழுதி வைக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி ஆவணத்திலும் முனியப்பன் கோவிலுக்கு சென்றுவரக்கூடிய எனக்கும் எனது முதல் மனைவி கனகவள்ளிக்கும் தடவழி பாத்தியம் இருப்பதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி முனியப்பன் கோவில் எனது தகப்பனார் 1962 ம் வருடத்தில் சொத்தை கிரயம் பெறும் காலத்தில் இருந்தே இருந்து வருகிறது என்றால் சரிதான். 1999, 2004 மற்றும் 2010 ஆகீய வருடங்களிலும் முனியப்பன் கோவில் அங்குதான் உள்ளது என்றும் தற்போதும் மேற்படி முனியப்பன் கோவில் அங்குதான் உள்ளது என்றால் சரிதான். முனியப்பன் கோவிலுக்கு நானும் எனது முதல் மனைவி கனகவள்ளியும் சென்று வரக்கூடிய தடவழி பாத்தியம் இருப்பதாக எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். நங்கவள்ளி – மேச்சேரி தார் சாலை வழியாகத்தான் வண்டி வாகனம் சென்று வரக்கூடிய வழி உள்ளது என்றால் சரிதான். எனது நிலத்திற்கு கிழக்கில் ஒட்டினாற்போல் கெச்சம்பட்டிக்கு சென்று வரக்கூடிய தார் சாலை உள்ளது என்றால் சரிதான். மேற்படி தார் சாலை வழியாக சென்றால் 1 ஆம் பிரதிவாதிக்கு பாத்தியமான சர்வே எண். 41/2F ல் 93 செண்ட் நிலத்திற்கு செல்லலாம் என்றால் சரிதான். கெச்சம்பட்டி சாலையில் இருந்து முனீயப்பன் கோவிலுக்கு சென்று வருவதற்காக 1 ஆம் பிரதிவாதி 3000 சதுர அடி நிலத்தை பாதைக்காக விட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எங்கள் குடும்பத்தினர் முனீயப்பன் கோவிலுக்கு சென்று வருவதற்காக மேற்படி பாதையை விட்டுள்ளார் என்றும் தற்போது அது பற்றி தெரியாது என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. கெச்சம்பட்டி சாலை வழியாக முனீயப்பன் கோவிலுக்கு சென்றுவருவதற்கு எந்த தடையும் இல்லை என்றும் யாருடைய அனுமதியும் தேவையில்லை என்றும் 1 ஆம் பிரதிவாதி 3000 சதுர அடி நிலத்தை மேற்படி கோவிலுக்கு சென்று வருவதற்கான பாதைக்காக விட்டுள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி 3000 சதுர அடி பாதை வழியாக நாங்கள் முனியப்பன் கோவிலுக்கு

சென்றுவழிபாடு செய்ய 1ஆம் பிரதிவாதி அனுமதிக்கிறார் என்றால் அதற்கு நான் மறுப்பு தெரிவிக்கிறேன். எம்.எம்.ரத்தினவேல், கே.கே.சேகர், எம்.எம்.மாணிக்கவேல், சி.மாணிக்கவேல் ஆகியோர் சொத்துக்களை பாகம் பிரிக்கும் போது எங்களுக்கு பஞ்சாயத்து செய்தார்கள்.மேற்படி பஞ்சாயத்து செய்தவர்கள் 10 வருடங்களாக பாகம் பிரித்த போது எனக்கு 5 ஏக்கர் 5 செண்ட்டும், 1ஆம் பிரதிவாதிக்கு 1 ஏக்கர் 90 செண்ட்டும் பிரித்து கொடுத்துள்ளார்கள் என்றும் இது சரிசமமாக பிரிக்கப்பட்டுள்ளதா என்றால் நியாயமாகத்தான் பிரித்துள்ளார்கள். எனக்கு தற்போது 61 வயதாகிறது. எனது பெரியக்காவிற்கு தற்போது சுமார் 75 வயது இருக்கும். எனது மற்றொரு சகோதரரி ராஜாமணிக்கு 70 வயது இருக்கும். மற்றொரு சகோதரியான விஜயாவிற்கு 65 வயது இருக்கும். நான் விவசாயம் செய்து கொண்டு உரக்கடை வைத்துள்ளேன். மேற்படி உரக்கடையை சுமார் 30 வருடங்களாக வைத்துள்ளேன். நான்தான் எனது சகோதரரிகளுக்கு திருமணம் செய்து வைத்தேன். எனது சகோதரிக்கு திருமணம் ஆனபோது எனக்கு சுமார் 15 வயதுதான் இருக்கும் என்றும் அப்போது எனக்கு எந்த வருமானத்தை கொண்டு அவர்களுக்கு திருமணம் செய்து வைத்தேன் என்றால் நாங்கள் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்துதான் திருமணம் செய்தோம். எனது தகப்பனார் தேங்காய் வியாபாரம் செய்து ரூ.10 லட்சத்திற்கு மேல் தொகை கையில் வைத்துக்கொண்டு இறுதி காலம் வரை செல்வாக்குடன் வாழ்ந்தார் என்றும் அவரது தனிப்பட்ட வருமானத்தில் தான் அனைவருக்கும் திருமணம் செய்து வைத்தார் என்றும் சொன்னால் சரியல்ல. நான் தான் என் தகப்பனாரை இறுதி காலம் வரை மருத்துவ சிகிச்சை அளித்து பராமரித்து வந்தேன் என்று சொல்வது தவறு என்றும், 1ஆம் பிரதிவாதி வங்கி மேலாளராக பணி செய்து அவர்தான் எனது பெற்றோரை இறுதி காலம் வரை மருத்துவ சிகிச்சை அளித்து பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. 13.02.2022ம் தேதி 1ஆம் பிரதிவாதி வட்டாட்சியரிடம் மனு கொடுத்து 08.01.2023ம் தேதியன்று வட்டாட்சியர் 1ஆம் பிரதிவாதியின் நிலம் அமைந்துள்ள சர்வே எண்.41/2F சொத்தை அளவீடு செய்து முட்டுக்கல் போட்டதை நானும் எனது இரண்டாவது மனைவியும் சேர்ந்து முட்டுக்கல்லை எடுத்து அவர்களை அளக்க விடாமல் தடுத்து அனுப்பிவிட்டோம் என்றால் சரியல்ல. மேற்படி சர்வே எண்.41/2F யில் 93 செண்ட் நிலத்தில் முனீயப்பன் கோவில் இல்லை என்றும் அது ஓரமாக உள்ளது என்றும் சொன்னால் சரிதான். மேற்படி 1ஆம் பிரதிவாதி வட்டாட்சியரிடம் கொடுத்த மனு நான் ஆட்சேபணை தெரிவித்த காரணத்தினாலும் வழக்கு நிலுவையில் உள்ள காரணத்தினாலும் மேற்படி மனு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். முனியப்பன் கோவில் சர்வே எண்.41/2F ல் 93 செண்ட்டில் தென்கிழக்கு மூலையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி முனியப்பன் கோவிலுக்கு சென்றுவர 1ஆம் பிரதிவாதி 3000 சதுர அடி நிலத்தை 10 அடி அகல நடை பாதைக்காக விட்டுள்ளார் என்றும், மேற்படி முனியப்பன் கோவிலுக்கு வருடத்திற்கு ஒருமுறை தான் பண்டிக்காக சென்று

வருவோம் என்றும் அதற்காகதான் மேற்படி பாதையை 1 ஆம் பிரதிவாதி விட்டுள்ளார் என்றால் சரியல்ல. எங்களுக்கு குல தெய்வம் பெரியாண்டிச்சி அம்மன் என்றால் சரிதான். மேற்படி குலதெய்வம் காடகரையானூரில் அமைந்துள்ளது என்றால் சரிதான். எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் இதுநாள் வரை மேற்படி முனியப்பன் கோவிலுக்கு சர்வே எண்.41/2F ல் உள்ள எனது வீட்டில் இருந்து கிழக்கே ரோட்டை அடைந்து அதில் இருந்துதான் வெளியே சென்று வருகிறேன் என்று குறிப்பிட்டுள்ள விவரம் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. எனது வீட்டில் இருந்து மேச்சேரி செல்லும் தென் வடல் தார்சாலை உள்ளது என்றும் அதைதான் நான் பயன்படுத்தி வருகிறேன் என்றும் தற்போது வழக்கிற்காக வீட்டில் இருந்து கிழக்கு நோக்கி வந்து கெச்சம்பட்டி தார் சாலையை பயன்படுத்துவதாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் அந்த வழியையும் நான் பயன்படுத்துவேன். இரண்டு வழிகளையும் நான் பயன்படுத்துவேன். என் வீட்டில் இருந்து மேச்சேரி ரோடு வழியாக செல்வதற்கும் எனக்கு வழி உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து உள்ளிட்ட 12 ஏக்கர் சொத்துக்களை எனது தகப்பனார் அய்யண்ணன் சுயமாக சம்பாதித்த சொத்து என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் அனைத்தும் பிதுராஜித சொத்துக்கள் அல்ல என்றால் சரிதான். 12.02.2023 மற்றும் 25.02.2023 ஆகிய தேதிகளில் 1 ஆம் பிரதிவாதி நிலத்தரகர்களை அழைத்து வந்து நிலத்தை விற்க முயற்சி செய்தார் என்று எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விவரம் பொய்யானது என்றால் சரியல்ல. மேற்படி விவரம் வழககை தாக்கல் செய்வதற்காக கற்பனையாக ஏற்படுத்தப்பட்ட வழக்கு மூலம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் 8 ஆம் பத்தியில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதி தரப்பில் பதிலுரை தாக்கல் செய்த பிறகு சர்வே எண். 40/1 சொத்தில் எனக்கு முன்னுரிமை மற்றும் வண்டி தட உரிமை உள்ளது என்றும் கோரி வழக்கை திருத்தம் செய்திருப்பது தவறு என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 9 யில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை 1 ஆம் பிரதிவாதியிடம் விலைக்கு கேட்டதாகவும், அவர் கொடுக்க மறுத்துவிட்டார் என்றும், அதனால் 1 ஆம் பிரதிவாதி யிடம் சொத்தை வாங்க முன்னுரிமை உள்ளது என்றும் வேறு நபர்களுக்கு விற்க கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு எந்தவித அடிப்படை உரிமையும் இல்லாத பட்சத்தில் நானே பொது பாத்தியம் உரிமை இருப்பதாக கற்பனையாக வழக்கை முன்வைத்து இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நானும் எனது இரண்டாவது மனைவியும் 1 ஆம் பிரதிவாதியின் நிலத்திற்கு விவசாய வண்டி வாகனம் வருவதை நிறுத்தி வசைபாடி வருகிறோம் என்றும் ஆட்சேபணை செய்து மிரட்டி வருகிறோம் என்றால் சரியல்ல. நான் நில புரோக்கரிடம்

10 செண்ட் நிலமாவது விலையில்லாமல் 1ஆம் பிரதிவாதி கொடுக்கவேண்டும் என்று மிரட்டி வருகிறேன் என்றால் சரியல்ல. 1ஆம் பிரதிவாதி மற்றும் எனக்கும் எனது தகப்பனார் அய்யண்ணன் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்து அதன் அடிப்படையில் அவரவர் சொத்துக்களை அவரவர் அனுபவித்து வரும் நிலையில் வழக்கு மூலமே இல்லாமல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக அறிவிப்பு எதுவும் அனுப்பாமல் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 2010ம் ஆண்டில் இருந்து 1ஆம் பிரதிவாதி வா.சா.ஆ.3 ஆவணத்தின் அடிப்படையில் அவரது சொத்தை தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். தாவாவில் குறிப்பிட்டுள்ள தாவா சொத்தை கிரயம் செய்ய எனக்கு முன்னுரிமை இருப்பதாக சொல்வது தவறு என்றும் அதனால் இவ்வழக்கை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒம்/—சீனிவாசன்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/—எல்.கமலகண்ணன்,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.